சிவமயம்



கனகம்புளியடிச்சந்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# சின்னையா கந்தையா

(பொன்னுத்துரை) அவர்களின்

# பொன்னுலகப் பிரபந்தம்

25 - 03 - 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பொடு பண்பும் கூட்டி
அறவழி அதனில் நின்று
அன்போடு எம்மைப் பேணி
அறிவொளி வீசச் செய்து
அருமையாக எம்மைக் காத்த
அன்புடைய தெய்வமே அப்பா
உங்கள் பொன்னடிக்கே இம்
மலரைச் சாற்றிப் போற்றி
நிற்கின்றோம் யாம்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் சின்னையா கந்தையா
## (பொன்னுத்துரை) அவர்கள்



மலர்வு:
18❖05❖1917

உதிர்வு:
23❖02❖2005

## திதி வெண்பா

**ஆண்டு திகழ் தாரணத்தில் மாசி மாதமதில்**
**பூண்ட பௌர்ணமித் திதியதனில் - மாண்புடைய**
**பேரோங்கு பொன்னுத்துரை எனும் கந்தையா**
**மருதடியான் தாள்பிடித்த நாள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

## தேவாரம்

வேத மோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ் சூழப் பொலிய வருவார் புலியினுரி தோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதந் தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிர வென் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனுந்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியுமாடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
“பிறாவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன்; அடியின்கீழ் இருக்க” என்றார்

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## ஔவையார் பாடல்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மானிலத்தீர் - வேண்டா
நமக்கு அதுவழியே போமநாமளவும்
எமக்கென் னென் றிட்டுண்டிரும்.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க மேன்மைகொள்
சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திரு. சின்னையா கந்தையா (பொன்னுத்துரை) அவர்களின்

# வாழ்க்கைச் சுவடுகள்

வட பாகத்திலே சீரும் சிறப்பும் பெற்ற யாழ்ப்பாண மாவட்டத்திலே சைவமும் தமிழும் செழித்து விளங்கும் தென்மராட்சிப் பிரிவில் தெய்வீகம் பொழியும் கிராமம் மட்டுவில் பதியாகும். இவ் மட்டுவில் பதியில் கண்ணகை அம்மன், முத்துமாரியம்மன், மருதடிப்பிள்ளையார் ஆகிய சிறந்த ஆலயங்களும், சான்றோர்களும் கல்விமான்களும் அறிஞர் பலரும் வாழ்ந்தனர், வாழ்ந்துகொண்டுமிருக்கிறார்கள்.

இலந்தைத்திடல் காளி கோயில் அமைந்த ஐந்து சந்தி என்று அழைக்கப்படும் கனகம்புளியடிச் சந்தியில் சின்னையாவும் அவரது தமையனும் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் சின்னையா சிதம்பரம் என்பவரை விவாகம் செய்து இல்லறத்தின் பயனாக அவர்களுக்கு இரு ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். மூத்தமகனாக செல்லத்துரை என்பவர் பிறந்தார். அவரைத் தொடர்ந்து இரண்டாவது மகனாக கந்தையா என்பவர் 18.05.1917-ம் ஆண்டு பிறந்தார். இவர்கள் இருவரும் ஒன்றுவிட்ட தமையனார் செல்லப்பா என்பவருடன் ஒன்றாக இருந்து வாழ்ந்தனர்.

தமையனார் செல்லப்பா என்பவர் திருமணம் முடித்து தவமணிதேவி, மகாதேவன் என்ற இரு குழந்தைகளைப் பெற்று வாழ்ந்தார். அவர்களுடன் மிகவும் ஐக்கியமாகவும் இருந்தார். இவரது அண்ணன் செல்லத்துரை இருபாலையைச் சேர்ந்த திரவியம் என்பவரை விவாகம் செய்து இல்லறத்தின் பயனாக சிவபாக்கியம், சிவானந்தசோதி, சிவசோதி, சிவபாலசுந்தரம் என்பவர்களைப் பெற்று சீரும் சிறப்புமாக ஒருங்கே இருந்து அவர்களுக்கு செய்ய வேண்டிய உதவிகளையும் கடமைகளையும் செய்தார் சகோதரர் கந்தையா.

பொன்னுத்துரை என அன்போடு அழைக்கப்பட்ட இவர் கனகம்புளியடி இலந்தைத்திடல் காளியின் அருளால் மிகவும் சிறப்பாக வளர்ந்து வரலானார். இவர் யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் கல்வி கற்று பின், ஒன்றுவிட்ட சகோதரனான செல்லப்பா அண்ணரிடம் சாரதிப்பயிற்சி பெற்று தனக்கென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சோமசெற் காரை வாங்கி ஓடத் தொடங்கினார். இவரது இளம் வயதிலே தாயை இழந்து விட்டார். அதனால் இவரது அண்ணன் செல்லத்துரையுடனும் அவரது மனைவி மக்களுடனும் இனிது வாழ்ந்து வரும் காலத்தில் திருமணம் செய்ய உத்தேசித்து மட்டுவில் வடக்கில் இருக்கும் சுப்பையா செல்லமுத்துவின் பிள்ளைகளாக நல்லம்மா, கிருஷ்ணசாமி (அதிபர்), சந்தானலட்சுமி, தங்கம்மா, பாலச்சந்திரன் ஆகிய வர்களில் தங்கம்மா என்பவரை கந்தையா (பொன்னுத்துரை) என்பவர் பெற்றோர் விருப்பப்படி 1957-ம் ஆண்டு மணம் முடித்தார்.

கந்தையா தங்கம்மாவின் இல்லறப் பயனாக நந்தகுமார், விக்கினேஸ்வரி, ஜெயக்குமார், ஜெயகுமாரி என்ற இரு ஆண்பிள்ளைகளையும் இரு பெண் பிள்ளைகளையும் பெற்று மிகவும் சீரும் சிறப்பாக வளர்த்து கல்வி கற்பித்தார். தனது சாரதித் தொழில் மூலம் தமது பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்தினார்.

இவர்களின் மூத்த மகனாக நந்தகுமார் என்பவர் 14 வயதில் தந்தையாரின் தொழிலான சாரதித் தொழிலையே மேற்கொண்டார். இவர் சாவகச்சேரியைச் சேர்ந்த சிவப் பிரகாசத்தின் மகள் வசந்தராணியை விவாகம் செய்து டேனார்ஷன் என்ற மகனையும், திவ்வியா என்ற மகளையும் பெற்றுள்ளனர்.

முத்த மகளான விக்கினேஸ்வரி என்பவர் மீசாலையைச் சேர்ந்த குமாரசாமி பரமேஸ்வரன் என்பவரை விவாகம் செய்து யசிந்து என்ற மகளைப் பெற்று கனடா சென்று கௌசிகா, லோஜிதா என்ற குழந்தைகளையும் பெற்று கனடாவில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் மூத்த மகள் யசிந்து கனடாவில் மருந்துவக் கல்லூரியில் கற்கின்றார்.

அடுத்த மகன் ஜெயக்குமார் மானிப்பாயைச் சேர்ந்த சுவாமிநாதன் நந்தினியை விவாகம் செய்து தாட்சாயினி, தனஞ்செயன், தாமரா, தனுஜா ஆகிய மூன்று மகள்மாரையும், ஒரு மகனையும் பெற்று கனடாவில் வாழ்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய மகளான ஜெயகுமாரி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை) என்பவர் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த உறவுக்காரரான கந்தையா பேரின்பநாதனை (சவுதி மின் இணைப்பாளராக இருந்து கடமை ஆற்றி) பின்னர் சொந்த இடத்துக்குத் திரும்பி விவாகம் செய்து சேரலாதன், சேந்தன், உமைவாணன் என்ற மூன்று ஆண் குழந்தைகளைப் பெற்றுள்ளார். இவர் பாடசாலைக்குச் செல்வதுடன் ஒழுங்காகத் தந்தையையும் பார்த்து வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்வதற்கு மிகவும் சிறப்பாக மகளுடன் மருமகனும் துணையாக நின்றுள்ளனர்.

பெறாமக்களாக முரளிதரன் (கனடா) உமா (கனடா) அரவிந்தன் (மல்லாவி P.H.I), பத்மா ஆகியோரும் மருமக்களாக வானதி, வாசுகி, வாகினி, வாணி, பிரதீபன், மாதங்கி ஆகியோருடன் மிகவும் அன்பாக பழகினார்.

பொன்னுத்துரை பலருக்கு சாரதிப்பயிற்சி அளித்துள்ளார். அந்த வகையில் கதிர்காமசேகர் தெய்வநாயகிக்கு சாரதிப் பயிற்சியளித்தமை குறிப்பிடத்தக்கது. இப்போது அவர் கனடாவில் வாழ்கின்றார். இதைவிட இரவு நேரத்திலும் காருக்காக யார் வந்து கூப்பிட்டாலும் உடனடியாக எழுந்து போய் உதவி செய்தார். பாடசாலை ஆசிரியர்களையும் மாணவர்களையும் நேரம் தவறாது பாடசாலைக்கு காரில் ஏற்றி சென்று வந்தார்.

இவர் வீட்டில் வருத்தம் என்று இருந்தாலும் மற்றவர்களுக்கு எதுவித துன்பங்களும் கொடுக்காமல் இருந்தார். அயலவர்களான தேவி குடும்பம், ரஞ்சி குடும்பம், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்களுடன் மிகவும் அன்புடன் பழகினார். மாசி மாதம் பூரணை விரத நன்னாளாம் 2005-ம் ஆண்டு 23-ம் திகதி 12 மணியளவில் இளைய மகள் மருமகன், மனைவி, உற்றார், உறவினர் கதறி அழ மகள் ஜெயக்குமாரி இல்லத்தில் மீளா உறக்கத்தில் இறைவனடி சேர்ந்து கொண்டார்.

**க.கந்தையா**
(இளைப்பாறிய அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரு வாழ்வு பெற்றாயே

அலைகடலுக் கப்பாலே அதிதூரம் நாமிருந்து
அலையலையாய் கண்ணீரை அள்ளிநாம் சொரிகின்றோம்
தொலைதூரம் எமைவிட்டுத் தொல்லுலகை நீதுறந்து
நிலையாகச் சென்றனையோ நின்றுநாம் அழுகின்றோம்.

அருகிருந்து பார்க்கவில்லை ஆனபணி செய்யவில்லை
பெருங்கடலுக் கப்பாலேநாம் பெருந்தூரம் சென்றதனால்
கருணையோடு எமைவளர்த்துக் காசினியில் உயரவைத்த
பெருமையுடன் நீரும் பெருவாழ்வு பெற்றாயே.

ஊரெல்லாம் திரண்டிருக்க உற்றவரும் சூழ்ந்திருக்க
பாரதனை விட்டுப் பரமனடி சென்றாயோ
ஊரெல்லாம் கூடியுன் னுடலை யெரிக்கையிலே
வேரற்ற மரம்போலே விழுந்திட்டோம் நாமிங்கு.

உந்தனாவி சோர்ந்து உயரத்தே பறக்கையிலே
உந்தனுளம் எம்மை எண்ணியே சாய்ந்ததனை
இந்தவுயிர் உள்ளவரை இதயத்தே வைத்திருந்து
அந்தவுலகு வரும்போது அர்ப்பணிப்போம் உன்னிடம்.

ஆழ்கடலுக்கப்பாலிருந்து
அரற்றுகின்ற
***பிள்ளைகள்,***
***மருமக்கள், பேரப்பிள்ளைகள்.***

உறவைப் பிரிக்கலாம்
உடன்பிறப்புக்களைப் பிரிக்கலாம் - ஆனால்
பாச பந்தங்களைப் பிரிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

1. மனிதனில் ஒரே தாளத்தில் கேட்கும் ஒலி எது?
   *இதயத்துடிப்பு*
2. முதல் நிறங்கள் எவை?
   *சிவப்பு, மஞ்சள், நீலம்*
3. இலங்கையில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் எது?
   *திருகோணமலை*
4. அந்தி நேரத்தில் இலைகள் குவிந்து விடும் தாவரம் யாது?
   *அகத்தி மரத்தின் இலைகள்*
5. நான்கு வருடத்திற்கு ஒரு முறை 366 நாள் வரும் வருடத்தை எப்படி அழைப்பர்?
   *லீப் வருடம்*
6. இலங்கை சுதந்திரம் அடைந்த தினம் எது?
   *1948 பெப்ரவரி 04*
7. இலங்கையின் தேசியக் கொடியில் இருக்கும் சின்னம் யாது?
   *வாளேந்திய சிங்கம்*
8. சாரணிய இயக்கத்தை முதல் முதல் உருவாக்கியவர்?
   *பேடன் பவல்*
9. இலங்கையில் தாவரவியல் பூங்கா அமைந்துள்ள இடம் யாது?
   *கண்டி பேராதனைப் பூங்கா*
10. பொருட்களின் தரத்தைக் குறிக்கும் குறியீடு யாது?
    **SLS**
11. மிக வேகமாக ஓடக் கூடிய விலங்கு எது?
    *சிறுத்தை (கங்காரு)*
12. ஆண் பறவையும் பெண் பறவையும் மாறி மாறி அடை காக்கும் பறவை எது?
    *புறா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Short Sentences - எளிய வாக்கியம்

| | |
|---|---|
| God is love | - அன்பே இறைவன் |
| Hello How are You | - ஹலோ எப்படி இருக்கிறீங்கள் |
| I am well | - நான் நன்றாக இருக்கிறேன் |
| Please Come here | - தயவு செய்து இங்கே வா |
| Please go there | - தயவு செய்து அங்கே போ |
| I am Sorry | - நான் வருத்தப்படுகிறேன் |
| Excuse me | - என்னை மன்னித்துக் கொள் |
| Please wait | - தயவு செய்து காத்திரு |
| Congratulation | - வாழ்த்துக்கள் |
| Light the lamp | - விளக்கைப்போடு |
| Keep Silence | - அமைதியாக இரு |
| Mind your business | - உன் வேலையைப் பார் |
| Meet me tomorrow | - நாளை என்னைச் சந்தி |
| Stop talking | - பேச்சை நிறுத்து |
| Drive Slowly | - மெதுவாக ஓட்டு |
| Walk Slowly | - மெதுவாக நட |
| Speak loudly | - சத்தமாகப் பேசு |
| Do You Understand | - புரிந்து கொண்டாயா? |
| Let's go | - போவோமா |
| May I come in | - உள்ளே வரலாமா |
| Forget it | - மறந்து விடு |
| Don't forget | - மறந்து விடாதே |
| Open the door | - கதவை திற |
| Shut the door | - கதவை மூடு |
| Sign here | - இங்கே கையெழுத்திடு |
| Come to the point | - விடயத்துக்கு வா |
| Drink the milk | - பாலைக் குடி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Write a letter - ஒரு கடிதம் எழுது
Sing a song - ஒரு பாட்டுப் பாடு
Belive me - என்னை நம்பு
Don't cry - அழாதே
Don't weep - அழாதே
Doesn't matter - பரவாயில்லை
Don't move - அசையாதே
Don't hesitate - தயங்காதே
Inform me - எனக்குத் தெரிவி
Invite him - அவனை அழை
Startimmediatly - உடனே தொடங்கு
Come forward - முன்னால் வா
Go back - பின்னால் போ
It is mine - இது என்னுடையது
It is missing - அது காணாமல் போய்விட்டது
It is so? - அப்படியா?
Wash your dress - உனது துணியை சுத்தப்படுத்து
Brush your teeth - உனது பற்களை சுத்தப்படுத்து
Watch him - அவனைக் கவனி
He is my son - அவன் என்னுடைய மகன்
She is my daughter - அவள் என்னுடைய மகள்
He is my neighbour - அவன் என்னுடைய அயலவன்
I know him - எனக்கு அவனைத் தெரியும்
I like to buy a car - நான் ஒரு கார் வாங்க விரும்புகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**சின்னையா + சிதம்பரம்**
- செல்லத்துரை
- **கந்தையா (பொன்னுத்துரை)**

**சுப்பையா + செல்லமுத்து**
- நல்லம்மா
- கிருஷ்ணசாமி (அமரர்)
- **தங்கம்மா**
- சந்தானலட்சுமி
- பாலச்சந்திரன்

**கந்தையா (பொன்னுத்துரை) + தங்கம்மா**

- **நந்தகுமார்** + வசந்தராணி
  - டேனார்ஷன்
  - திவ்வியா
  - (சாவகச்சேரி)
- **விக்கினேஸ்வரி** + பரமேஸ்வரன்
  - யசிந்து
  - கௌசிகா
  - லோஜிதா
  - (கனடா)
- **ஜெயகுமார்** + நந்தினி
  - தாட்சாயினி
  - தனஞ்செயன்
  - தாமரா
  - தனுஜா
  - (கனடா)
- **ஜெயகுமாரி** + பேரின்பநாதன்
  - சேரலாதன்
  - சேந்தன்
  - உமைவாணன்
  - (மட்டுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



பாசம் மிக்க குடும்பத் தலைவராய்
நல்ல வழிகாட்டியாய் சாரதியாய்
வாழ்ந்து எம்மையும் வாழ வழிகாட்டிய
எம் அன்பு தெய்வம்

**அமரர் சின்னையா கந்தையா**
**(பொன்னுத்துரை) அவர்கள்**

எமது அய்யா இறந்த செய்தி
அறிந்துடனே ஓடி வந்து
அரும் பணிகள்
புரிந்தவர்களுக்கும் நொந்து
பட்ட எங்களுக்கும், தந்தி
பல தந்து வைத்து
அனுதாபச் செய்தி தந்தவர்க்கும்,
பாடசாலை ஆசிரியர்களுக்கும்,
இறுதிக் கிரியை தனில் இரங்கலுரை
செய்தவர்க்கும், இம் மலரை
யாத்தவர்க்கும், அச்சிட்டுத்
தந்தவர்க்கும்
இத்தனைகளில் இதைத்
தவிர்ந்த அத்தனைக்கும்
நன்றி பல.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

திருக்கணித பதிப்பகம் – டச்சு வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org